



பறவைகளை நேசித்த மனிதன்

பறவைகளை நேசித்த மனிதன்












ஒரு சமயம், அடர்ந்த பசுமையான காட்டில் பறவைகளை
நேசித்த ஒரு மனிதன் வாழ்ந்தான்.

காட்டில் வாழும் அனைத்து பறவைகளின் மொழியும் அவருக்குத் தெரியும் (பெரும்பாலும்)!



அவர்களின் உரையாடல் பெரும்பாலும் கால்பந்து விளையாட்டு... கூடு கட்டுவது எப்படி... சைக்கிள் ஓட்டுவது .... புழு பூச்சிகளை பிடிப்பது பற்றியதாக இருக்கும்.



அவர்கள் ஒன்றாக கூடி பலமுறை இனிமையான விளையாட்டுகளில் காலம் கழித்தனர்.



அதில் ஒருவர் மேல் ஒருவர் தண்ணீர் பீய்ச்சி விளையாடுவதும் ஒன்று.

நட்சத்திரங்கள்
கண்சிமிட்டும்
வானத்தின்
கீழே இசைக்
கச்சேரிகளும்
நடக்கும்...



ஒரு நாள் அவருக்கு ஒரு பயங்கரமான செய்தி வந்தது!





பளபளக்கும் நீண்ட கருப்பு
துப்பாக்கிகளை ஏந்திய சில
வேட்டைக்காரர்கள் அந்த அடர்ந்த
பச்சைக் காட்டிற்குள் நுழைந்து
கொண்டிருந்தனர்.







பயந்து நடுங்கிய பறவைகள் உடனடியாக தங்கள் நண்பரிடம் சென்றன.

அவர்களுக்கு அவர் எப்படியாவது உதவ முடியுமா?
ஆம், ஒரு நல்ல திட்டம் அவர் மனதில் தோன்றியது.
என்ன திட்டம் போட்டிருப்பார், சொல்லுங்களேன்?





அவர் உடனடியாக தனது பறவை நண்பர்கள் சிலரை சிவப்பு பெயிண்டும்
பிரஷும் கொண்டு வருமாறு அனுப்பினார்.





இதற்கிடையில், வெறிச்சோடிய அமைதியான அந்த காட்டில் வேட்டைக்காரர்கள்
மெதுவாக முன்னேறி கொண்டிருந்தனர்.

திடீரென்று ஒரு திறந்தவெளியை அடைந்த அவர்கள் திகைத்து நின்றார்கள்...



அவர்களை திகைக்க வைத்த காட்சி இது தான்...

வேட்டைக்காரர்கள் வெட்கத்துடன் தலை குனிந்தார்கள்.





இனி எப்போதும் வேட்டையாட
மாட்டோம் என்ற முடிவுடன் திரும்பி
நடந்தார்கள்..

பின்னர் காட்டில் ஒரு ஆனந்த அலை பரவியது.



உங்களுக்கும் அது தெரிகிறது தானே?

முற்றும்



